In the Court of the Principal District Munsif, Padmanabhapuram.

Original Suit No. 76/2017

Deposition of the C.W.1 witness for

Name : John Messiah Elcarteen

Father's Name :

District :

Taluk :

Village :

Calling :

Religion :

Age :

Date : 22.06.2023

Solemnly affirmed by Thiru/Tmt. Assistant, Principal District Munsif Court, Padmanabhapuram in accordance with the Provision of Act XLIV of 1893.

1. நான் இந்த வழக்கின் ஆணையர் என்றால் சரிதான். நான் வழக்குச் சொத்தை பார்வையிட்டு அறிக்கை மற்றும் இரண்டு வரைபடங்கள் தயார் செய்துள்ளேன். மேற்படி அறிக்கை மற்றும் வரைபடத்துடன் குறுந்தகடுடன் கூடிய 13 புகைப்படங்களும் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அறிக்கை நீ.ம.சா.ஆ.1 ஆகும். முதலாவது வரைபடம் நீ.ம.சா.ஆ.2 ஆகும். இரண்டாவது வரைபடம் நீ.ம.சா.ஆ.3 ஆகும். புகைப்படம் குறுந்தகடுடன் கூடியது நீ.ம.சா.ஆ.4 ஆகும். வரைபடங்களில் வாதி மற்றும் பிரதிவாதிகளின் மனைகளை காட்டியுள்ளேன். வாதி மற்றும் பிரதிவாதியின் கண்டங்கள் ஒரே சொத்தாகதான் உள்ளது. இருவரின் சொத்தை பிரிக்கக்கூடிய வகையில் சுற்றுச்சுவரோ அல்லது கற்களோ இல்லை. வழக்கு எ பட்டிகை சொத்தில் வாதியின் வீடு உள்ளது. மேற்படி வீட்டின் கதவு எண்.15-38 எப் ஆகும். பிரதிவாதியின் சொத்தில் ஒரு ஆஸ்பெஸ்டாஸ் செட் உள்ளது. அதற்கு கதவு எண் கிடையாது.

2. வாதி மற்றும் பிரதிவாதிகளின் சொத்திற்கு செல்லக்கூடிய பாதைதான் வழக்கு பி பட்டிகை சொத்தாகும். மேற்படி பி பட்டிகை சொத்து கருங்கல் குளச்சல் பிரதான சாலையில் தொடங்கி மேற்கு பக்கமாக மேற்படியார்களின் சொத்து வரை செல்கிறது. பி பட்டிகை சொத்தின் வடக்கு பக்கம் இரும்பு முள்வேலியும் தெற்குபக்கம் சுற்றுச்சுவரும் உள்ளது. தெற்குபக்கம் உள்ள சுற்றுச்சுவருக்கு அடுத்து தொட்டிகளில் வளர்க்கப்படும் செடிகளை வளர்ப்பதற்காக கான்கீரீட்டால் ஆன சுவர் கட்டப்பட்டு அதில் செடி வளர்க்கப்பட்டுள்ளது. பி பட்டிகை சொத்திற்கு கிழக்குபக்கம் ஒரு இரும்பு கேட்டும் கான்கீரீட்டால் ஆன வளைவும் உள்ளது. பி பட்டிகை சொத்தின் அகலம் 3.30 மீட்டர் ஆகும். பி பட்டிகை சொத்து வழியாக கார் போன்ற வாகனம் சுலபமாக செல்லலாம். நான் வழக்கு சொத்தை பார்வையிடும்போது வாதியின் வீட்டில் கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. அதை நான் புகைப்படத்தில் காட்டியுள்ளேன்.